| O.S.No. 08/2023 | PW1 : திருமதி. பச்சையம்மாள்<br>க/பெ. திரு. செல்வராஜ் | 28-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1 முதல் 4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. 1-ம் பிரதிவாதி மூர்த்தி எனது தம்பி. 2 முதல் 4 பிரதிவாதிகள் என் மற்றொரு தம்பி கோவிந்தராஜனின் வாரிசுகள். 5-வது பிரதிவாதி பெருமாள் என் கணவரின் அண்ணன் மகன். என் மகளை திருப்புலிவனத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். என் மகளுக்கு 1-ம் பிரதிவாதி மூர்த்திதான் வரன் பார்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் மகளின் காதுகுத்தல் விழா, மஞ்சள் நீராட்டு விழா ஆகியவற்றிற்கான செலவுகளைள 1-ம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் சரிதான். என் தந்தை இறந்து சுமார் 10 வருடம் ஆகிறது. என் தந்தையின் சாவிற்கு நான் மட்டும்தான் சென்றேன் என்றால் என் கணவரும் வந்தார்.

2. என் தந்தை இறப்பதற்கு முன்பாக சொத்துக்களை என் தம்பிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டேன் என்றும், அதில் எதுவும் பாகம் கேட்கவேண்டாம் என்றும், எனக்கு உரியதை என் தம்பிகள் செய்வார்கள் என்றும் என் தந்தை என்னிடம் சொன்னார் என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. என் தந்தையின் காரியத்திற்கு என் கணவர் வரவில்லை என்றாலும், நான் மட்டும்தான் சென்றேன் என்றால் சரியல்ல, என் கணவரும் வந்தார். என் கணவர் என் தம்பிகளுக்கு சம்மந்தமும் செய்ய மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே அவர் என் தந்தைக்கு சொந்தமான தனிப்பட்ட 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களை என் தம்பிகளான மூர்த்தி மற்றும் கோவிந்தராஜூக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

3. 15-03-2006 தேதியிட்ட ஆவண எண். 407/2006 மூலமாக என் தந்தை 1-ம் பிரதிவாதிக்கு 1-வது அயிட்ட சொத்தில் 25 சென்ட்டும், 2-வது அயிட்ட சொத்தில் 15 சென்ட்டும் ஆக மொத்தம் 40 சென்ட் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால்

அது எனக்கு தெரியாது. அதேபோல் 15-03-2006 தேதியிட்ட ஆவண எண். 408/2006 மூலமாக என் தந்தை, 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை கோவிந்தராஜூக்கு 1-வது அயிட்ட சொத்தில் 25 சென்ட்டும், 2-வது அயிட்ட சொத்தில் 17 சென்ட்டும் ஆக மொத்தம் 42 சென்ட் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

4. மேற்படி சொத்துக்களை என் தந்தை என் தம்பிகளுக்க எழுதி வைத்ததால்தான் என் தந்தையின் சாவிற்கு, காரியத்திற்கும் செல்லக்கூடாது என என்னிடம் கூறினார் என்றால் சரியல்ல. அதனால்தான், என் கணவர் காரியத்திற்கு சம்மந்தம் கட்ட வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 3 தலைமுறையாக அனுபவித்து வரும் பூர்வீக சொத்து என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை என் தம்பிகளுக்கு எழுதிவைத்த தான செட்டில்மெண்ட்டில் கண்டுள்ள சொத்துக்கள் என் தந்தைக்கு தனிமையில் பாத்தியமான சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. பச்சைப்பிள்ளைக்கு பாலுபிள்ளை, பொன்னப்பிள்ளை, கச்சுவோலைபிள்ளை, முத்துப்பிள்ளை ஆகிய 4 வாரிசுகள் ஆவார்கள். மேற்படி 4 பேரும் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்து அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் அது எனக்கு தெரியாது.

5. தாவா சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவா 1-ஆவது அயிட்ட சொத்தில் 2 ஏக்கர் நிலத்தினை பச்சைப்பிள்ளையின் வாரிசுகள் தலா ஆளுக்கு 50 சென்ட் என்று பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வகையில் முத்துப்பிள்ளைக்கு வந்த பாகமான 50 சென்ட்டினை சர்வே எண். 189/2A5-ன்படி அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அதேபோல் தாவா 2-வது அயிட்ட சொத்தான 32 சென்ட்டை முத்துப்பிள்ளை பாகமாக பிரித்துக்கொண்டார் என்றால் தெரியாது.

6. வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்தினை என் தந்தை அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் அவரவர் பாகத்தினை அவரவர் வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொள்ளாமல் அனுபவித்து வந்தார்கள். தாவா சொத்து பாகம் பிரிக்கப்பட்டு முத்துப்பிள்ளையின் தனிப்பட்ட சொத்து என்று UDR-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முருகன், மூர்த்தி, பெருமாள், புஷ்பராணி ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது என்றாலும் அதில் என் பெயர் இல்லை என்றாலும் சரிதான். 2-வது அயிட்ட சொத்து மூர்த்தி, பெருமாள், புஷ்பராணி பெயரில் வா.சா.ஆ.2 பட்டா உள்ளது என்றாலும், அதில் என்னுடைய பெயர் இல்லை என்றாலும் சரிதான்.

7. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்திருந்தால் பட்டாவில் என்னுடைய பெயரும் இருந்திருக்கும் என்றாலும், தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை என்னுடைய தந்தை என்னுடைய தம்பிகளுக்கு எழுதி பாத்தியப்படுத்திவிட்டதால் என் தம்பி வாரிசுகள் பெயரிலும் பட்டா பதிவாகியுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக தாவா சொத்துக்களை கூட்டா அனுபவித்து வருகிறோம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. என் தந்தை என் தம்பிகளுக்க தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எங்களுக்கு நன்கு தெரியும் என்றாலும், அதனால்தான் என் கணவர் என் தந்தையின் இறப்பு மற்றும் காரியத்திற்கு நான் செல்லக்கூடாது என என்னிடம் பிரச்சனை செய்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி விஷயம் என் தந்தை இறப்பிற்கு முன்பாகவே எனக்கு தெரியும் என்றாலும், தற்போது பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

8. பெருமாள் வீடு கட்டி 10 வருடம் ஆகிறது என்றால் 2 வருடம் ஆகிறது. பெருமாள் வீடு கட்டும்போது நானும், என் கணவரும் உடனிருந்து வேலைகளை செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். பெருமாள் வசிக்கும் ஊரில்தான் நானும் வசிக்கிறேன். எங்கள் வீட்டிலிருந்து 4 வீடுகள் தள்ளி

பெருமாள் வீடு கட்டியுள்ளார். அதேபோல் 6-ம் பிரதிவாதி முருகனும் அந்த இடத்தில் மனை வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

9. 5, 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த விஷயம் எங்களுக்கு நன்கு தெரியும் என்றாலும், அந்த விற்பனை சட்டப்படி செல்லும் என்றாலும், அதை ஆட்சேபிக்க எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. 1-ம் பிரதிவாதி அவரது மனைவி அம்பிகாவிற்கு எழுதி வைத்த கிரய பத்திரமும், அம்பிகா 5, 6 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த கிரய பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கில் வியாஜ்ஜியமூலம் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அதனால் இவ்வழக்கினை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றாலும் சரியல்ல. 1,2 அயிட்ட சொத்துக்கள் என் தந்தையின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அச்சொத்துக்களை என் தந்தை என் தம்பிகளுக்க தான செட்டில்மெண்ட எழுதி பாத்தியப்படுத்திவிட்டதால் அந்த சொத்துக்களை பொறுத்து நான் எந்தவித பாக உரிமையும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் தந்தை என் தம்பிகளுக்க எழுதி வைத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

10. ஆவண எண். 408/2006 ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்ய எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். அயிட்டம் எண். 3 சொத்தில் என் தம்பி மகன் சிவக்குமார் வீடு கட்ட ஆதார் கார்டு வாங்க வந்தபோதுதான் சொத்துக்கள் குறித்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். என் மருமகன் மகன் சொல்லிதான் பிரச்னை செய்தோம் என்றால் சரியல்ல. ஆதார் கார்டு வாங்க வந்தபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது, அதற்கு முன்பு பிரச்சனை ஏதும் இல்லை. என் மருமகனும், மகனும் பிரச்சனை செய்ததால்தான் நான் இத்தனை ஆண்டுகள் கழித்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

**<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

(5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**